1978 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :—ஸ்டாண்டேர்ட் ஏக்கர் ஐந்து உள்ளவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற சட்டம் அரசாங்கக் கணக்கில் இதுவரையில் இல்லை. ஐந்து ஏக்கர் என்று இனிமேல் வேண்டுமானல் திருத்தலாமே தவிர இப்போது அப் படிப்பட்ட சட்டம் இல்லை.

Jagir lands in Kalrayan hills

*Q. No. 223 : THIRU C. PALANIMUTHU : Will the Hon, the M nister for Revenue be pleased to state:

(a) whether survey and settlement has been completcd in the erstwhile Jagirs of Chinnakalrayan and Periakalrayan areas in Salem District in pursuance of Minor Inams Abolit on Act;

(b) the extent of lands settled in favour of the Tribal people;

(c) whether Non-Tribal people also have been given 'patta' in the Settlement; and

(d) if so, the extent of lands so given to them?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) பெரிய கல்ராயன் மேல்நாடு மற்றும் கீழ்நாடு ஜாகிர்கள் தமிழ்நாடு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1963ன் கீழ் 13—2—1973 அன்று எடுத்துக் கொள்ளப்பட்டு சர்வே மற்றும் செட்டில்மெண்ட் வேலைகள் நடைபெற்று வருகின்றன. சின்னகல்ராயன் ஜாகிர்கள் பசலி 1381 (1970-71)ல் தமிழ்நாடு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1963ன் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு செட்டில்மெண்ட் செய்யப்பட்டு விட்டன.

(ஆ) சின்ன கல்ராயன் மலைகளில் (வடக்கு நாடு மற்றும் தெற்கு நாடு) 3303—07—5 ஹெக்டேர்கள் விஸ்தீர்ணம் 1,647 மலைசாதி மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. பெரிய கல்ராயன் மலைகளில் இதுவரை 2,434—72—5 ஹெக்டேர் நிலம் 1,186 மலைசாதி மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

(இ) ஆம்.

(ஈ) சின்ன கல்ராயன் (வடக்குநாடு மற்றும் தெற்கு நாடு) மலைகளில் 256—15—5 ஹெக்டேர்கள் நிலம் மலைச்சாதியினர் அல்லாத 51 பேருக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. பெரிய கல் ராயன் மலைகளில் இதுவரை 14—30—00 ஹெக்டேர் நிலம் மலைச்சாதியினர் அல்லாத நான்கு பேருக்குக் கொடுக்கப்பட்டுள் ளன.